**Starting time 12.04 P.M.**

## <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No. 351/2002**

Deposition of **P.W. 2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. M. Kamatchi, Gr. III Bench Clerk of this court, on 02-11-2022 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

<u>1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> : இவ்வழக்கின் 2-ஆம் வாதி மணி எனது தகப்பனார் என்றால், சரிதான். தாவா சொத்துக்கள் எதுவும் என் பெயரில் உள்ளதா என்றால், இல்லை. தாவா சொத்து விவரத்தில் உள்ள மூன்று சர்வே எண்ணுக்கான ஆவணங்களை நானோ, எனது தகப்பனாரோ இதுவரை தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதுபற்றி சரியாக தெரியவில்லை. தாவா சொத்துக்கள் முழுவதும் அரசாங்கத்துக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் என்றால், அதுபற்றி தெரியாது, ஆனால் அது தீர்வை ஏற்பட்ட தரிசு ஆகும். தாவா சொத்துக்கள் எங்கள் அனுபவத்தில் உள்ளதற்கு ஆதாரமாக அனுபவச் சான்று உள்ளிட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தீர்வை செலுத்தி வருகிறோம்.

2. சர்வே எண் 72/17-க்கான புலவரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். அதில் சர்வே எண் 72/17 என்ன என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை. நான் சொல்வது தவறு என்றும், சர்வே எண் 72/17 பாதையாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. மேற்படி சொத்துக்கான அ பதிவேட்டை

பார்த்தேனா என்றால், பார்த்தேன். எல்லம்மாளிடம் கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தில் சர்வே எண் 72/17 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை, ஆனால் வாய் மொழியாக அந்த சொத்தை நாங்கள் அனுபவத்தில் எடுத்துக் கொண்டு அனுபவித்து வருகிறோம்.

3. எங்கள் குடும்பத்தில் எழுதிக் கொண்ட 16.03.1993 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தில் சர்வே எண் 72/17 சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை, தீர்வை ஏற்பட்ட தரிசு என்பதால் அதை பத்திரத்தில் சொல்லவில்லை. எல்லம்மாளிடம் கிரயம் பெற்ற போதோ அல்லது எங்கள் குடும்பத்தில் பாகம் பிரித்துக் கொண்ட போதோ மேற்படி சொத்தை குறித்து பதிவு செய்யப்படாத ஆவணம் எதுவும் எழுதிக் கொள்ளப்பட்டதா என்றால், இல்லை. தேவியாக்குறிச்சி கிராமத்திலிருந்து சிவசங்கராபுரம் கிராமம் செல்வதற்கு ஒரு பஞ்சாயத்து பொது பாதை செல்கிறது என்றால், சரிதான். சர்வே எண் 181-ல் உள்ள நிலம் எங்கள் பட்டா நிலம் என்றால், சரிதான். அந்த சொத்தின் வடபுறம் சர்வே எண் 72/15-ல் உள்ள சொத்தும், 72/17-ல் உள்ள சொத்தும் உள்ளது என்றால், 72/15-ல் உள்ள சொத்து வடக்கிலும், 72/17-ல் உள்ள சொத்து மேற்கிலும் உள்ளது. தேவியாக்குறிச்சி கிராமத்திலிருந்து சிவசங்கராபுரம் கிராமம் செல்லும் சாலைக்கு மேற்கு நோக்கி ஓடை வரை சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்து அமைந்துள்ளது என்றால், சாலையை ஒட்டி 72/15-ல் உள்ள சொத்தும், அதன் தொடர்ச்சியாக மேற்கில் 72/17-ல் உள்ள சொத்தும், அதற்கும் மேற்கே 72/14-ல் உள்ள சொத்தும் உள்ளது. சர்வே எண் 182-ல் எங்களுக்கு சொந்தமாக நிலம் உள்ளதா என்றால், இல்லை, சர்வே எண் 181/A, B-ல் மட்டும் தான் பட்டா நிலம் உள்ளது.

4. எங்களது நிலத்திற்கு மேற்கில் ஓடையும், ஓடைக்கு மேற்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் நிலமும் உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட விவரம் தெரியுமா என்றால், ஆணையார் வந்தார், அப்போது ஆணையரிடமிருந்த ஆவணங்கள் போலியான ஆவணங்கள் என்பதால், அதற்கு நாங்களும், எங்களது வழக்கறிஞரும் ஆட்சேபனை தெரிவித்துவிட்டு அங்கிருந்து வந்துவிட்டோம். ஆணையர் ஆய்வு பணியை முடித்துவிட்டு தாக்கல்

செய்துள்ள தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்தேனா என்றால், பார்த்தேன். ஆணையர் அறிக்கையில், சர்வே எண் 72/17-ல் உள்ள சொத்து பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல, 2 அடி உயரமுள்ள வரப்பு, தென்னைமரம், மரவள்ளி கிழங்கு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 72/17-ல் உள்ள பாதையை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்து கொண்டதால், புல வரைபடத்தில் உள்ளவாறு பாதையின் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டி 1 முதல் 3 வரையான பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், தவறான ஆவணங்கள் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி சொத்துக்கான சரியான புலவரைபடம் இதுதான் என்று இதுநாள் வரை நாங்கள் தாக்கல் செய்தோமா என்றால், அது எனது அப்பாவிற்குதான் தெரியும்.

5. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மாற்று பாதை இருப்பதை நிரூபிக்க எங்கள் தரப்பில் ஆணையர் நியமனம் செய்ய வேண்டி இதுநாள் வரை மனுதாக்கல் செய்தோமா என்றால், இல்லை. அவ்வாறு மாற்றுப்பாதை இருப்பதற்கான ஆவணமாவது எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

6. அசல் வழக்கு எண் 208/2006-ல் நான் தரப்பினராக உள்ளேனா என்றால், இல்லை, எனது அப்பா தரப்பினராக உள்ளார். அந்த வழக்கு உண்மையான வழக்கு அல்ல என்றும், எங்களுக்கு வேண்டப்பட்டவரின் துணையுடன் உட்கூட்டாக சேர்ந்து அவ்வழக்கை தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால், சரியல்ல, எங்களது அனுபவத்திற்கு இடையூறு செய்ததால்தான் அவ்வழக்கை தாக்கல் செய்தோம். எனது தகப்பனார் சாட்சியம் அளித்த போது, பின்னர் தாக்கல் செய்வதாக சொன்ன ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், எனது தகப்பனார் என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்கு தெரியாது. தாவா சர்வே எண் 72/17-ன் அக்கம் பக்கம் விவசாய நிலம் உள்ளது என்றால், சரிதான்.தாவா சம்மந்தமாக யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால், எனது தகப்பனார் தாக்கல் செய்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல, நாங்கள் வேறு சாட்சியை விசாரிக்க உள்ளோம்.

7. எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதுகளுக்கும், இவ்வழக்கு

சொத்துக்களுக்கும் சம்மந்தமில்லை என்றால், சரியல்ல. சர்வே எண் 72/14-ல் உள்ள சொத்தை யார் அனுபவித்து வருகிறார் என்றால், 1-ஆம் வாதி ஆறுமுகம் என்பவர் அனுபவித்து வருகிறார், 72/15-ல் உள்ள சொத்தை யார் அனுபவித்து வருகிறார் என்றால், 3-ஆம் வாதி பெரியசாமி அனுபவித்து வருகிறார். 1, 3 வாதிகள் மேற்படி சொத்துக்களை அனுபவித்து வருவதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளோமா என்றால், ஆவணங்களை வழக்கறிஞரிடம் எனது அப்பா கொடுத்துள்ளார். வழக்கறிஞரிடம் கொடுத்துள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து விவரத்தில் உள்ள மூன்று அயிட்ட சொத்துக்களுக்கும், மூன்று வாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை என்பதால் இவ்வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time : 12.35 P.M.

**ஒப்பம்/- ஜி.யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**